DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No. 220/2014 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பால சுப்பிரமணியம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பொன்னுசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | காங்கயம் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.04.2024.

முதல் விசாரணை

1. நான் தற்போது காங்கயத்தில் வசித்து வருகிறேன். கடந்த 16.11.2013 ம் தேதியன்று மாலை சுமார் 06.00 மணியளவில் எங்களது வீட்டை பூட்டிவிட்டு நானும், எனது மனைவியும் திருப்பூர் ரோட்டிலுள்ள ஸ்ரீசெந்தூர் ஆயில் மில்லுக்கு சென்று இரவு தங்கிவிட்டு 17.11.2013 ம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு எங்களது வீட்டிற்கு வந்து வீட்டை திறந்து பார்த்தபோது எங்கள் வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது. பின்பு வீட்டிலுள்ள பீரோவிலுள்ள லாக்கர் திறந்து கிடந்தது, துணிமணிகளும் ஆங்காங்கே சிதறி கிடந்தது. அந்த லாக்கரில் இருந்த எனது மனைவியின் நகைகளான 4 வளையல்கள், 7 காசுகள், 4 பவுன் செயின் மற்ற நகைகள் ஞாபகம் இல்லை, ஆனால் ஆக மொத்தம் 19 பவுன் களவு போய் விட்டிருந்தது.

2. அப்போது எனது மகன் வைத்திருந்த ரூ.6,00,000/- பணமும் காணாமல் போய்விட்டதாக எனது மகன் சொல்லி எனக்கு தெரியும். அந்த சமயம் அங்கு அக்கம்பக்கம் இருந்த நபர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். இது சம்மந்தமாக காங்கயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான், அந்த **புகார் மனு அ.சா.ஆ.1.** பின்பு 15 நாட்கள் கழித்து நகைகள் கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள். அந்த தகவலின் பேரில் நானும், எனது மனைவியும் சென்று எங்களது நகையை அடையாளம் காட்டியும், பணத்தையும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக் கொண்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர். நாங்கள் வீட்டிற்கு சென்று பார்த்தவுடன் கதவு உடைக்கப்பட்டிருந்த விவரம் தெரிந்து உடனே காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை. அந்த சமயம் சுமார் 30, 40 நபர்கள் கூடியிருப்பார்கள். எங்கள் வீட்டிற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 3 பர்லாங்க் தூரம் இருக்கும். அதாவது, 1/2 கி/மீ தூரம் இருக்கும். எங்கள் வீட்டிலிருந்து காவல் நிலை யத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க நானும், எனது மகனும் சென்றோம். புகாரை நான் தான் எழுதிக் கொடுத்தேன். களவு போன நகைகள் வாங்கியது சம்மந்தமான பில் ரசீதுகள் ஏதேனும் போலீசிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை எத்தனை முறைகள் விசாரித்தார்கள் என்றால் பலமுறை விசாரித்தார்கள்.

2. நான் புகார் கொடுத்தவுடன் போலீசார் சம்பவ இடத்தை வந்து பார்த்தார்கள். லாக்கரில் எவ்வளவு பணம் இருந்தது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல எங்கள் வீட்டில் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–C.செந்தில்குமார்
நீதித்துறை நடுவர்,
காங்கயம்.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No. 220/2014 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வள்ளியத்தாள் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பால சுப்பிரமணியம் | ஜாதி | : | |
| கிராமம் | : | காங்கயம் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.04.2024.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது காங்கயத்தில் வசித்து வருகிறேன். கடந்த 16.11.2013 ம் தேதியன்று மாலை சுமார் 06.00 மணியளவில் எங்களது வீட்டை பூட்டிவிட்டு நானும், எனது கணவரும் திருப்பூர் ரோட்டிலுள்ள ஸ்ரீசெந்தூர் ஆயில் மில்லுக்கு சென்று இரவு தங்கிவிட்டு 17.11.2013 ம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு எங்களது வீட்டிற்கு வந்து வீட்டை திறந்து பார்த்தபோது எங்கள் வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது. பின்பு வீட்டிலுள்ள பீரோவிலுள்ள லாக்கர் திறந்து கிடந்தது, துணி மணிகளும் ஆங்காங்கே சிதறி கிடந்தது. அந்த லாக்கரில் இருந்த எனது நகைகளான 4 வளையல்கள், 7 காசுகள், 4 பவுன் செயின் மற்ற நகைகள் ஞாபகம் இல்லை, ஆனால் ஆக மொத்தம் 19 பவுன் களவு போய் விட்டிருந்தது.

2. அப்போது எனது மகன் வைத்திருந்த ரூ.6,00,000/- பணமும் காணாமல் போய்விட்டதாக எனது மகன் சொல்லி எனக்கு தெரியும். அந்த சமயம் அங்கு அக்கம்பக்கம் இருந்த நபர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். இது சம்மந்தமாக காங்கயம் காவல் நிலையத்தில் எனது கணவர் புகார் கொடுத்தார். பின்பு நகைகள் கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள்.

3. அந்த தகவலின் பேரில் நானும், எனது கணவரும் சென்று எங்களது நகையை அடையாளம் காட்டியும், பணத்தையும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக் கொண்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. நானும், எனது கணவரும் ஆயில் மில்லிருந்து காலை 06.30 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். எங்கள் வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது. 4 வளையல்கள், 7 காசுகள், செயின்-1 இன்னும் சில நகைகள் காணாமல் போயிருந்தது. நாங்கள் எங்கள் வீட்டு பீரோவை பூட்டாமல் தான் ஆயில் மில்லுக்கு சென்றிருந்தோம். அந்த நகைகளை வாங்கியதற்கான பில் ரசீதுகளை போலீசிடம் கொடுத்தோமா என்றால் இல்லை. புகார் கொடுக்க நான் காவல் நிலையம் செல்லவில்லை, எனது கணவரும், எனது மகனும் தான் சென்றார்கள். லாக்கரில் பணம் இருந்த விவரம் எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை.

ஒம்/-C.செந்தில்குமார்
நீதித்துறை நடுவர்,
காங்கயம்.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No. 220/2014 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பால சுப்பிரமணியம் | ஜாதி | : | |
| கிராமம் | : | காங்கயம் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.04.2024.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது காங்கயத்தில் வசித்து வருகிறேன். கடந்த 16.11.2013 ம் தேதியன்று மாலை சுமார் 06.00 மணியளவில் எங்களது வீட்டை பூட்டிவிட்டுஎனது அப்பாவும், அம்மாவும் திருப்பூர் ரோட்டிலுள்ள ஸ்ரீசெந்தூர் ஆயில் மில்லுக்கு சென்று இரவு தங்கிவிட்டு 17.11.2013 ம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு வந்து வீட்டை திறந்து பார்த்தபோது வீட்டிலிருந்த நகைகள் மற்றும் பணம் திருடு போய்விட்டதாக எனது அப்பா போன் மூலம் தகவல் சொன்னார். நான் அந்த தகவலின் பேரில் தேங்காய் பருப்பு வாங்கவேண்டி அவினாசி சென்று அங்கிருந்து அன்று மதியம் வீட்டிற்கு வந்து பார்த்தேன். அப்போது எங்கள் வீட்டு பீரோ லாக்கரில் இருந்த சுமார் 19 பவுன் தங்க நகைகள் மற்றும் ரூ.6,00,000/- களவு போயிருந்தது தெரிய வந்தது. பின்பு இது சம்மந்தமாக காங்கயம் காவல் நிலையத்திற்கு சென்று நானும், எனது அப்பாவும் சென்று எனது அப்பா மூலம் புகார் கொடுத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. நான் தகவல் கேட்டு அன்றைய தினம் மதியம் 01.00 மணிக்கு தான் எனக்கு அப்பா தகவல் கொடுத்தார்.

நான் அன்றைய தினம் மாலை சுமார் 4, 5 மணிக்கு வந்தேன். வந்தபிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பணம் எவ்வளவு களவு போயிருந்தது என்று நாங்கள் கொடுத்த புகாரில் குறிப்பிட்டு சொன்னோமா என்றால் ரூ.6,00,000/– என்று சொன்னோம். நகைகளுக்குண்டான பில் ரசீதுகள் எதுவும் போலீசாரிடம் நாங்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல எந்தவொரு நகையும், பணமும் களவு போகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–C.செந்தில்குமார்
நீதித்துறை நடுவர்,
காங்கயம்.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No. 220/2014 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வச்சிரவேல் | ஜாதி | : | |
| கிராமம் | : | காங்கயம் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.04.2024.

முதல் விசாரணை

1. நான் தற்போது காங்கயத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2013 ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை, ஒருநாள் மதியம் சுமார் 01.30 மணிக்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவம் பற்றி விசாரித்தார்கள். என்னுடன் பாலசுப்பிரமணி என்பவரும் இருந்தார். போலீசார் எங்கள் முன்னிலையில் வரைபடம் வரைந்து எழுதினார்கள். நாங்கள் அதில் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையதுதான் ஆகும். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ.2** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. எனது வீடும், புகார்தாரர் பாலசுப்பிரமணியன் வீடும் பக்கத்து பக்கத்துவீடு, நல்ல பழக்கமான நபர் ஆவார். சம்பவம் பற்றி மறுநாள் காலையில் தான் தெரியும். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்துவிட்டு, தற்போது போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-C.செந்தில்குமார்
நீதித்துறை நடுவர்,
காங்கயம்.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No. 220/2014 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமூர்த்தி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சாமியப்பன் | ஜாதி | : | |
| கிராமம் | : | படியாண்டி வல சு | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.04.2024.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது படியாண்டி வலசில் வசித்து வருகிறேன். கடந்த 30.11.2013 ம் தேதி அதிகாலை சுமார் 01.00 மணிக்கு நான் காங்கயத்தில் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள சூர்யா பேக்கரியில் வேலை முடித்துவிட்டு வந்து டீக்குடித்து கொண்டிருந்தேன். அப்போது காவல் ஆய்வாளர் அவர்கள் ஆஜர் எதிரியை பேக்கரிக்கு அழைத்து வந்து அங்கு வைத்து விசாரித்து கொண்டிருந்தார். அப்போது நான் அங்கு டீக்குடித்து முடித்துவிட்டு நானும், எனது நண்பர் பாரதி என்பவரும் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரி இவ்வழக்கு புகார்தாரர் பால சுப்பிரமணியம் வீட்டில் நகைகளையும், பணத்தையும் திருடி சென்றதை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்தார்.

2. அந்த வாக்கு மூலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் எழுதி பதிவு செய்து கொண்டார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் என்னிடமும், எனது நண்பர் பாரதியிடமும் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் பேரில் நகைகளையும், பணத்தையும் கைப்பற்றவேண்டி எதிரியையும், எங்களையும் அழைத்து கொண்டு திண்டுக்கல்லுக்கு சென்று சுமார்

ரூ.5,54,000/—யும், சுமார் 17 பவுன் நகையையும் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார்கள். **எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.3, கைப்பற்றுதல் மகஜர்களிலுள்ள உள்ள 2—வது கையொப்பங்கள் அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:—</u>**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். நானும், பாரதியும் நண்பர்கள் என்றால் சரிதான். சூர்யா பேக்கரியில் ஆய்வாளர் அவர்கள் சுமார் 1 மணி நேரம் விசாரித்தார்கள். எதிரி எங்கள் முன்னிலையில் பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். பின்பு காவல் ஆய்வாளர்கள் எதிரியையும், எங்களையும் அழைத்த கொண்டு திண்டுக்கல்லுக்கு சென்று ஒரு வீட்டிற்கு சென்று எதிரி பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அப்போது ரூ.4000/—ஐ எடுத்து ஆஜர் செய்தார், அது எத்தனை ரூபாய் நோட்டுக்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி 30ம் தேதி அதிகாலை சுமார் 05.00 மணிக்கு பணத்தை எடுத்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். அதேபோல் நகையையும் அன்றைய தினமே 07.00 மணிக்கு கைப்பற்றினார்கள். நான் சொல்வது போல எதிரியிடமிருந்து எந்தவித பொருட்களும் கைப்பற்றவில்லை என்றும், எந்தவித கையொப்பமும் நான் செய்யவில்லை அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/—C.செந்தில்குமார்
நீதித்துறை நடுவர்,
காங்கயம்.